# HDFC BANK

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பல்வேறு நிதித் தீர்வுகள் ஊடாக இலங்கை மக்களின் வீட்டு கனவை நிறைவேற்றுவதோடு வர்த்தக சமூகத்தினருக்கு நிதி உதவிகளை அளித்து நாட்டின் நலனுக்காக தம்மை அர்ப்பணித்துள்ள வங்கியுடன் உங்களின் வங்கியியல் தொழிலை உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கான அரியதொரு வாய்ப்பு கிட்டியுள்ளது.

HDFC வங்கியில் உதவிப் பொது முகாமையாளர்/ பிரதான முகாமையாளர் - திறைசேரி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறமையான, செயல்திறன் மிக்க சாதகமான நோக்கை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு, தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளின் அனுபவத்தின் பிரகாரம் அவர்களை உதவிப் பொது முகாமையாளர் அல்லது பிரதான முகாமையாளர் பதவியில் அமர்த்தும் உரித்து வங்கிக்கு உண்டு

**உதவிப் பொது முகாமையாளர்/ பிரதான முகாமையாளர்- திறைசேரி**
**AGM/CHIEF MANAGER – TREASURY**

**அடிப்படை பொறுப்புகள்**

- வங்கியின் திறைசேரி செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஆபத்துகள் தொடர்பாக எதிர்வுகூறல்களை மேற்கொள்ளுதல், அவற்றை முகாமைத்துவம் செய்தல், அவற்றை குறைத்தல் மற்றும் வங்கியின் நிதி சார்ந்த எதிர்வுகூறல்களுக்கேற்ற வகையில் தெளிவானதும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டதுமான திறைசேரி மூலோபாயங்களை வகுத்தல்
- வர்த்தக தொழிற்பாடுகளுக்கு குறுகிய மற்றும் நீண்ட கால நிதியை திரட்டுவதற்கு மூலோபாயங்கள் மற்றும் செயன்முறைகளை வகுத்தல்.
- வட்டி விகித ஆபத்துகள், திரவத்தன்மை முகாமைத்துவம் மற்றும் உரிய நிதி திரட்டலை உள்வாங்கும் வகையில் அன்றாட திறைசேரி தொழிற்பாடுகளை வகுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்
- வாடிக்கையாளர்களின் நீண்ட நிதி அனுகூலங்களுக்கு ஏதுவான முதலீட்டு வாய்ப்புகளை ஈர்த்தல்
- கூட்டு நிறுவன நிதி நிலைமை தொடர்பான முக்கிய தீர்மானமொன்றை மேற்கொள்ளும் போது அதற்கு தேவையான ஏற்புடைய பின்னணி ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குழு (ALCO) / பணிப்பாளர் சபைக்கு ஏழுத்துமூலமாக இற்றைப்படுத்தல்

- நிதி மற்றும் முதலீட்டு உடன்படிக்கைகள் தொடர்பாக போதுமான கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல், சிறப்பான ஆபத்து முகாமைத்துவம் மற்றும் அறிக்கையிடல்
- சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் முதிர்வடைதல் தொடர்பான சீரின்மைகளை குறைப்பதற்கு ஏற்புடைய முகாமைத்துவ தகவல்களை சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குழுவிற்கு வழங்குதல் மற்றும் நிகழ் நிலைமை தொடர்பாக கலந்துரையாடுவதற்கு அக் குழுவின் கூட்டங்களை தொடர்ச்சியாக ஏற்பாடு செய்தல்.
- திரவத்தன்மை ஆபத்து வரம்பை பகுப்பாய்வு ரீதியாக மேம்படுத்தல்.
- திரவத்தன்மை /நிதி பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் உரிய நிதி திரட்டுதல் ஆகிய துறைகளை உள்வாங்கும் வகையில் அன்றாட திறைசேரி தொழிற்பாட்டு அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல்.
- கடன் வகைகள் மற்றும் நிலைப்படுத்தல் தொடர்பான அறிவு இருத்தல் வேண்டும்.
- போதுமான திரவத்தன்மையை உறுதிப்படுத்தி நிதி சார்ந்த சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் உத்தேச இலாபத்தை உச்ச மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு சந்தை வாய்ப்புகளை மேம்படுத்தல். அதன் பிரகாரம், நிதி மற்றும் முதலீடுகள் மற்றும் வங்கியின் ஒட்டுமொத்த திறைசேரி தொழிற்பாடுகளுக்கு ஏற்புடைய பல்வேறு பிரிவுகளின் ஆபத்து முகாமைத்துவ மூலோபாயங்களை மேம்படுத்தல் மற்றும் செயற்படுத்துவதற்கு பொறுப்பு கூறல் வேண்டும். திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களுக்கான திரட்டை வெளிப்படுத்த வேண்டிய கட்டாய பொறுப்பு உண்டு.

**தகைமைகள்**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் நிதி முகாமைத்துவம்/கணக்கீட்டு பட்டப்படிப்பை பெற்றிருத்தல்.
- கீழ் காணும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் மேலதிக தகைமை ஆகும்.
  - ICASL/ACCA/CIMA/CMA போன்ற நிறுவனங்களில் ஒன்றிலிருந்து பெறப்பட்ட முழு நேர தொழில் தகைமை
  - நிதியியல்/ பொருளியல் தொடர்பான முதுகலை பட்டம் பெற்றிருத்தல் மற்றும் /அல்லது
  - திறைசேரி முகாமைத்துவம் தொடர்பான தகைமைகள்

- நிதிச் சந்தை தொழிற்பாடு மற்றும் கடன் மற்றும் நிதி அளிக்கும் நிறுவனங்களுடன் கலந்துரையாடல் தொடர்பாக போதுமான அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
  - உதவிப் பொது முகாமையாளர் பதவிக்கு வங்கியொன்றிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றிலோ சிரேஷ்ட முகாமையாளர் பதவியில் 06 வருட அனுபவம் உள்ளிட்ட குறைந்தபட்சம் 15 வருட அனுபவம் இருத்தல்

- பிரதான முகாமையாளர் பதவிக்கு வங்கியொன்றிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றிலோ திறைசேரி தொழிற்பாடு தொடர்பாக சிரேஷ்ட மட்டத்திலான பதவியொன்றில் 08 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டிருத்தல்.

**வயதெல்லை** : 55 **வயதுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்**.

சந்தைப் பெறுமதிகளுக்கு ஒத்ததான வகையில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு தொகை செலுத்தும் உரித்தோடு கூடிய கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும்

**விண்ணப்பிக்கும் செயன்முறை**

HDFC வங்கியின் அதிகார இணையதளமான http://www.hdfc.lk ஊடாக ஏற்புடைய விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

விண்ணப்பதாரிகள் உத்தேச மாதிரி விண்ணப்பத்துக்குட்பட்டதாக விண்ணப்பிக்க வேண்டியது கட்டாயம் என்பதோடுஇ உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை ஏற்புடைய கோப்புகளுடன் 17.01.2024 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ உதவிப் பொது முகாமையாளர் – மனித வளங்கள் மற்றும் நிர்வாகம் என்ற பிரிவுக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் மேல் பகுதியின் இடது மூலையில் "உதவிப் பொது முகாமையாளர்/ பிரதான முகாமையாளர் - திறைசேரி பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு கோரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவத்தை பூரத்தி செய்திராத நபர்களுக்கு இந்த பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது. ஏற்புடைய தகைமைகளை பூர்த்தி செய்யாத நபர்களின் விண்ணப்பங்கள், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்துக்கு பின்னர் கிடைத்த விண்ணப்பங்கள் மற்றும் உத்தேச மாதிரி படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சையின் போது ஏற்புடைய கோப்புகளின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தவறும் விண்ணப்பதாரிகள் எக் காரணத்தினாலும் மேற்படி பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

எந்தவொரு அழுத்தம் பிரயோகித்தலும் இப் பதவிக்கான தகைமை இழப்பாக கருதப்படும்.

ஆட்சேர்ப்புகளை பிற்போடுவதற்கான அல்லது ரத்துச் செய்வதற்கான உரிமை HDFC வங்கிக்கு உண்டு. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆட்சேர்ப்பு செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள்.


**உதவிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**

HDFC வங்கி,
த.பெ. இல 2085,
சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02
தொலைபேசி இல – 0112 356800 – இணைய தள முகவரி : www.hdfc.lk